29th March 1955]

Wages of workers in Vaigai Anicut Project

* 1685 *Q.*—SRI V. MUTHU : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the scheduled rates of daily wage per head (men and women) for the labourers working in the Vaigai Anicut Project; and

(*b*) whether the Government are enforcing the payment of the full scheduled rates of wages to the labourers, and if so, how?

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—(*a*) Re. 1–4–0 for men mazdoors and Re. 0–13–0 for women mazdoors.

"(*b*) No, Sir. The department pays women mazdoors wages at the scheduled rates. But men mazdoors are not paid wages at the scheduled rates as they are available for employment at less than the scheduled rates of wages. Labourers employed by contractors or job workers are paid by them at rates higher or lower than the scheduled rates of wages according to the work turned out by each worker. There are no means of enforcing payment of wages by them at a particular rate."

SRI V. MUTHU :—" இம்மாதிரி பிராஜெக்ட் வேலைகளை சர்க்கார் எடுத்து நடத்தும்போது அந்தப் பக்கத்திலுள்ள ஏழை மக்களுக்கு வேலை கொடுக்கவேண்டுமென்பதும் முக்கியமான கொள்கை. அப்படியிருக்க அணைக்கட்டு வேலை நடக்கும் இடத்தைச் சுற்றிப் இருப்பவர்கள் மிக ஏழைகள், கூலிக்கு வேலை செய்து பிழைக்கும் ஜனங்கள். அவர்களுக்கு கம்ப்ளெயிண்டு இருக்கிறது. ஏற்கெனவே அவர்கள் ஒரு தொழிற் சங்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஒரு சமயம் அவர்கள் வேலை நிறுத்தம் செய்யப்போவதாக நோட்டீஸ் கொடுத்திருந்தார்கள். சர்க்காருடைய எஸ்டிமேட்டே அதிகமாகத்தான் இருக்கும். அந்த எஸ்ட்டிமேட்டின்படியுள்ள வேலையை கண்டிராக்டர்கள் எடுத்துச் செய்யும்போது அதிக லாபம் கிடைக்கும் என்பதும் எல்லோருக்கும் தெரியும் . . ."

MR. SPEAKER :—" பிரசங்கம் செய்கிறீர்களே, கேள்வியாகப் போடுங்கள்."

SRI V. MUTHU :—" ஏழை கூலியாட்களுக்கு சரியான கூலி கிடைப்பதில்லை என்ற ' கம்ப்ளெயிண்டு ' இருந்துவருகிறது. அதைச் சர்க்கார் கவனித்து அவர்களை நல்ல முறையில் நடத்தும்படியாக செய்வார்களா? "

THE HON. SRI R. SHANMUGA RAJ SWARA SETHUPATHI:—" கனம் அங்கத்தினர் கேட்கும் கேள்வியின் அர்த்தமே எனக்குப் புரியவில்லை. கூலி கொடுக்காமல் வேலை எப்படி வாங்க முடியும்? அங்கத்தினர் தெளிவாகக்கேள்வியைக் கேட்டால் பதில் சொல்ல முடியும்."

SRI V. MUTHU :—" ஆட்களுக்கு கூலியே கொடுக்கவில்லை என்று நான் சொல்லவில்லை. கூலி கொடுக்காவிட்டால் வேலை நடந்திருக்காது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயந்தான். நான் சொல்வதென்னவென்றால், சர்க்காரால் நிர்ணயிக்கப்பட்ட அடிப்படையில் ஆட்களுக்குக் கூலி கொடுக்கப்படாமல் மிக மோசமான விதத்தில் கூலி கொடுக்கப்படுகிறது என்பதை மந்திரி அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்."

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—"ஆண்களுக்கு ரூ. 1–4–0 கூலியென்று நிர்ணயிக்கப்பட்டிருந்தும் அதற்கும் குறைவாகவும் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். குறைவான

[29th March 1955

அளவு கூலி வாங்கிக்கொண்டு வேலை செய்வதற்கு அங்கு ஆட்கள் இருக்கும்போது நிர்ணயிக்கப்பட்ட கூலியில் ஒரு சிறிய அளவுக்கு குறைத்து ரூ. 1-2-0, ரூ. 1-1-0 என்றும் கொடுக்கப்படுகிறது. கண்டிராக்டர் ஆட்களுக்கு கூலி கொடுப்பதிலும் ஏற்றத்தாழ்வு இருக்கிறது. சர்க்கார் கொடுக்கும் கூலி விகிதத்திற்கும் கண்டிராக்டர்கள் கொடுக்கும் கூலி விகிதத்திற்கும் ஒருவிதமான சம்பந்தமும் இல்லை."

Sri M. KALYANASUNDARAM:—" கண்டிராக்டர்களுக்குச் சேர வேண்டிய தொகையை சர்க்கார் ஒழுங்காகக் கொடுத்துவிடுகிறார்கள். சர்க்கார் கொடுப்பதில் தகராறு இல்லை. குறிப்பிட்ட ஒரு திட்டத்திற்கு கூலிச் செலவுக்காக எவ்வளவு ஆகும் என்று கண்டிராக்டர்கள் மதிப்பிட்டு சர்க்காருக்குக் கொடுத்திருக்கக்கூடிய திட்டத்தின்படி கண்டிராக்டர்கள் தொழிலாளிகளுக்குக்கூலி கொடுப்பதில்லை. கண்டிராக்டர்கள் ஒழுங்கான முறையில், நிர்ணயிக்கப்பட்ட அடிப்படையில் கூலி கொடுக்கவில்லையென்றால் அப்படிப்பட்டவர்களுடைய கண்டிராக்டை ரத்து செய்து நடவடிக்கை எடுக்கவும், தொழிலாளிகளுக்கு ஒழுங்காக கூலி கிடைக்கும்படிச் செய்யவும் சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்ளுவார்களா ?"

The Hon. Sri R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" தொழிலாளிகளிடமிருந்து அரசாங்கத்திற்கு எந்தவிதமான பிரார்த்தனையோ கோரிக்கையோ, புகாரோ வராமலிருக்கும்போது அரசாங்கமே எந்த நடவடிக்கையும் எடுத்துக்கொள்வதற்கில்லை."

Sri K. R. NALLASIVAM :—" குறைந்த கூலி வாங்கிக்கொண்டு டிபார்ட்மெண்டின் கீழ் வேலை செய்யக்கூடிய கூலிகளுக்கு அணைக்கட்டுப் பிரதேசத்தில் குடியிருப்பு வசதி ஏதாவது செய்யப்பட்டிருக்கிறதா ?"

The Hon. Sri R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" அது வேறு கேள்வி."

Sri K. P. GOPALAN :—" Will the Government instruct maistris to give wages to workers according to the principle of 'equal pay for equal work'?"

The Hon. Sri R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" Is it the intention of the hon. Member, why difference is shown between men and women in the matter of wages?"

Sri K. P. GOPALAN :—" In the matter of wages there is a difference between them. After all it is not an expert work. I want to know whether the Government will accept the principle of 'equal pay for equal work' irrespective of the sex?"

The Hon. Sri R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" It is a big trouble for the Government to assess the quantum of work. That apart, it is an accepted fact that men can turn out more work than women. So, there is a difference in their wages."

Sri V. BALAKRISHNAN :—" ஜீவனத்திற்காக யாருக்கு வேலையும் ஊதியமும் அவசியமோ அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளாமல் ஆடம்பரமாக இருக்கும் பெண்களைத்தான் கண்டிராக்டர்கள் கூலி வேலைக்கு எடுத்துக்கொள்ளுகிறார்கள் என்பது மந்திரி அவர்களுக்குத் தெரியுமா ?"

29th March 1955]

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" The Hon. Member may have more information with him about contractors and their natural inclinations but I am unable to give it."

SRI MOOKKIAH THEVAR :—" இது சம்பந்தமாக அங்கு அடிக்கடி கலவரம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. கலவரம் ஏற்பட்டு போலீஸ் ஸ்டேஷனுக்கும் போயிருக்கிறது. இன்ஜினீர் ஒருவர் பத்து ரூபாய் லஞ்சம் வாங்கியதாக ஒரு புகார் இருந்தது. சர்க்காருக்கும் தகவல் வந்திருக்கும். எங்களுக்கும் தகவல் கிடைத்திருக்கிறது."

MR. SPEAKER:—" ஒரு அதிகாரியின்மீது நீங்கள் குற்றஞ் சாட்டிப் பெசவேண்டுமானால் அந்தக் குற்றங்கள் ருசுப்பிக்கக்கூடியதாக இருக்கவேண்டும்."

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" யார் ஒருவர் லஞ்சம் வாங்கினார் என்பதற்கு ஆதாரபூர்வமாக தகவல் கொடுத்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கலாமேயொழிய, ஆதாரமற்ற புகார்களைச் சொன்னால் நான் ஒன்றும் செய்வதற்கில்லை."

SRI S. RAMALINGAM :—" தொழிலாளிகளிடமிருந்து சர்க்காருக்கு ஏதாவது விண்ணப்பம் வந்திருந்தால் அதன்மீது நடவடிக்கை எடுக்கலாம் என்று மந்திரி அவர்கள் சொன்னார்கள். கண்டிராக்டர்களிடம் வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு கூலி உத்தரவாதம் கிடையாது. அவர்கள் சர்க்காரிடம் ஏதாவது புகார் செய்துகொண்டால் உடனே அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுவார்கள் என்ற அபாயம் இருக்கிறது. 'சர்க்காரால் நிர்ணயிக்கப்பட்ட கூலியைவிட மிகக் குறைவான கூலி கொடுக்கப்படுகிறது' என்று அந்தப் பக்கத்திலிருந்து வந்திருக்கும் எம்.எல்.ஏ. சர்க்காருக்கு தெரியப்படுத்திருக்கிறார்கள். சர்க்காரால் நிர்ணயிக்கப்பட்ட கூலியைவிட மிகக் குறைவான கூலியைக் கண்டிராக்டர்கள் கொடுத்தார்கள் என்று புகார் சொன்னதன்பேரில் தொழிலாளிகள் வேலையிலிருந்து நீக்கப்பட்டால் சர்க்கார் தொழிலாளிகளை தனிப்பட்ட இலாக்காவில் சேர்த்துக் கொள்ளாவிட்டாலும், மேற்பார்வையாவது நேரடியாகநடத்துவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?"

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" கனம் அங்கத்தினர் சொல்கிறது ரொம்ப கஷ்டமானதும் நெரடானதுமானவிஷயம். பெரியகண்டிராக்டரிடம் சிறியசிறிய கண்டிராக்டர்கள் ஒப்பந்தம் பண்ணிக்கொண்டு குறைந்த தொகைக்கு வேலைகளை நடத்துவதற்கு ஒப்புக்கொள்ளுகிறார்கள். தொழிலாளிகளுக்குக் கொடுக்கப்படும் கூலி சரியல்ல என்று அவர்கள் முறையிட்டால் கண்ட்ராக்டர்களை கூப்பிட்டுக் கேட்கலாம், கண்டிராக்டை சர்க்கரர் ரத்து செய்யலாம். இதில் இன்னொரு விஷயத்தையும் நாம் கவனிக்கவேண்டும். ஒரு வேலையைக் கண்டிராக்டுக்கு விட்டுவிட்டு அதன்பிறகு கண்டிராக்டர்கள் என்ன செய்கிறார்கள் என்று ஒவ்வொரு கட்டத்திலும் சர்க்கார் பார்த்துக்கொண்டேயிருக்க வேண்டுமென்றால் வேலை நடப்பது கஷ்டமாக இருக்கும்."

DR. K. B MENON :—" Sir, since the issue has come up that 9 a.m. the contract system is riddled with corruption and exploitation, will the Government explore the possibilities of getting rid of that system and introducing some other system, which is more satisfactory and fair to labour, thereby making casual labour that is employed for a number of years more or less permanent? Will they prepare a list of such labourers also?"

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" The hon. Member suggests to the Government

[29th March 1955

to explore the possibilities of introducing a different system. I would like the hon. Member to give me his suggestions as to what kind of system he wants me to adopt, so that it can be investigated.''

SRI M. KALYANASUNDARAM :—'' கண்ட்ராக்டுக்கு விடுவதால்தான் இம்மாதிரியான தகராறுகள் அதிகமாகி வருகின்றன. கண்ட்ராக்டுக்கு விடாமல் நேரடியாகவோ அல்லது டிபார்ட்மெண்ட் மூலமாகவோ வேலைகளை நடத்துவதற்கு சர்க்கார் முன்வருவார்களா ? கண்ட்ராக்டர்கள் தொழிலாளர்களுக்குக் கொடுக்கும் சம்பளத்தை நிர்ணயம் செய்து சர்க்காரே நேரடியாக தொழிலாளர்களுக்கு சம்பளத்தைக் கொடுத்து விட்டு அந்தத் தொகையை, கண்ட்ராக்டர்களுடைய பில்களை பாஸ் செய்யும்போது, சர்க்காரே வைத்துக் கொண்டு தொழிலாளர்களுக்கு கொடுப்பதற்கு சர்க்கார் யோசிப்பார்களா ? ''

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :— ''கண்ட்ராக்டர்கள் கொடுத்தாலும் டிபார்ட்மெண்ட் கொடுத்தாலும் இப்பொழுது கனம் அங்கத்தினர்கள் சொல்லும் கொள்கைப்படி டிபார்ட்மெண்ட் ஊழியர்களும் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று சொல்லும்படியான நிலைமை ஏற்படும். அதைப்போலவே கண்ட்ராக்டர்களையும் சொல்லலாம். கண்ட்ராக்டர்கள் சரியாக நடந்துகொள்ளாவிட்டால் அவர்களுக்கு வேறு இடங்களில் கண்ட்ராக்ட் கொடுக்காமல் இருக்கலாம். கண்ட்ராக்டர்கள ரூ. 1-2-0 கொடுப்பதற்கு பதிலாக ரூ. 1-1-0 கொடுத்தால் இந்த ஒரு அணு போனுப் போகிறது என்றுதான்சொல்ல முடியும். ஆனல் கூலி கொடுப்பதில் அநீதியாக நடந்துகொண்டால் அந்தக்கண்ட்ராக்டர்பேரில் நடவடிக்கை எடுத்து அந்தக்கண்ட்ராக்டை ரத்து செய்ய முன்வராமல் சட்ட பூர்வமாக நடவடிக்கைஎடுப்பதற்கு இடம் இருப்பதாகத் தெரியவில்லை.''

SRI V. MUTHU :—'' கனம் மந்திரி அவர்கள் சொல்லும்போது அம்மாதிரி கம்ப்ளெயின்ட் ஒன்றும் வரவில்லை என்று சொன்னர்கள். அனுபவத்தைப் பார்த்தால் இது நன்றாகத் தெரியவரும். அம்மாதிரி கூலியைக் குறைத்துக்கொடுக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். சர்க்காருக்கும் தெரிந்திருக்கலாம். கண்ட்ராக்டர்கள் படிப்படியாக கூலியை 10 அணு வரை குறைத்துக் கொடுக்கிறார்கள். ஆகையால் பெட்டி கண்ட்ராக்டர் முறையை ஒழித்துக்கட்டி ஒரே கண்ட்ராக்டர் முறையைப் பின்பற்றுவார்களா ?''

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :— ''கம்ப்ளெயின்ட் வந்திருக்கிறதா என்று சொல்வதற்கு இல்லை. கம்ளெயின்ட் ஆதார பூர்வமாக வந்தால்தான் அதன்பேரில் நடவடிக்கை எடுக்கலாம். இப்பொழுது ஆதார பூர்வமாக வரவில்லை. அதனுல்தான் இதைப்பற்றி தக்க நடவடிக்கை எடுக்க முடிய வில்லை. ஆதார பூர்வமாக வந்தால் நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.''

SRI P. VENKATESHA SHOLAGAR:—'' கண்ட்ராக்டர்கள் இவ்வளவு கூலிகொடுக்க வேண்டும் என்று அவர்களைக் கட்டாயப்படுத்த முடியாது என்று கனம் மந்திரி அவர்கள் சொல்லுகிறார்கள். கட்டுப்படுத்தாமலே வெளி ஆட்கள் வரமுடியாமல் எக்சிக்யூட்டிவ் அதிகாரத்தின் மூலம் நிறைவேற்றமுயன்றால் அவர்கள் வெளி ஆட்கள் கிடைக்காமல் அந்த பிரதேச கூலிகளுக்கே நியாயமான கூலியைக் கொடுத்து வேலை வாங்க முன் வருவார்கள். அத்தகைய நடவடிக்கைகளை எடுக்க சர்க்கார் முன்வருமா என அறியவிரும்புகிறேன்.''

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :— '' கனம் அங்கத்தினருடைய யோசனை மிகவும் நன்றாக இருக்கிறது. எந்த சட்டத்தைக் கொண்டு எந்த அதிகாரத்தைக் கொண்டு அப்படிச் செய்ய முடியும் என்பதை விளக்கினல் அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.''

29th March 1955]

SRI M. NARAYANA KURUP :—" Sir, is it a condition in the contract that the contractor is liable to pay the labourer the same wages allowed by the Government? If not, will the Government make it a condition in every contract? "

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" Sir, while submitting his tender for the work, the contractor may be asked to state what wages he proposes to pay the workers. Then there may be a possibility of enforcing it and I shall explore that."

SRI M. KALYANASUNDARAM :—" தொழிலாளர்கள் நேரடியாக சர்க்காரிடம் முறையிட்டால் அதை கவனிப்பதாகச் சொல்லுகிறார்கள். தொழிலாளர்கள் நேரடியாகச் சர்க்காருக்குக் கடிதம் எழுதினால் பிற்பட்டு அவர்கள் கண்ட்ராக்டர்களிடம் வேலை பார்க்க முடியாது. இப்பொழுது எய்டட் ஸ்கூல் உபாத்தியாயர்களுக்கு சம்பளம் ஒழுங்காக கிடைக்கவில்லை என்று தெரிந்துகொண்டு சர்க்கார் அவர்களுக்கு நேரடியாகக் கொடுக்க முன் வந்திருக்கிறார்கள். அதைப்போலவே தொழிலாளர்கள் சர்க்காரிடம் வேலை செய்யும்போது, அதுவும் சர்க்காருடைய வேலையைச் செய்வதால் கர்க்கார் அவர்களுக்கு சம்பளத்தைக் கொடுப்பதற்கு பொறுப்புள்ளவர்களாக இருக்கிறார்கள்.—அதன் காரணமாக சர்க்கார் தொழிலாளர்களுக்கு நேரடியாகப் பணத்தைக் கொடுத்துவிட்டு கண்ட்ராக்டர்களுடைய பில்லை பாஸ பண்ணும்போது இந்தத் தொகையை அதில் கழித்துக்கொண்டு கண்ட்ராக்டர்களுககு மீதிப் பணத்தைக் கொடுப்பதில் சர்க்காருக்கு என்ன ஆட்சேபணை இருக்கிறது என்பதைக் கேட்க விரும்புகிறேன்."

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" This was exactly what I just said in reply to Sri M. Narayana Kurup. I said that there may be a possibility of asking the contractor to state while tendering for the work to specify the wages he is likely to pay and we can enforce that. We will collect the wages at that particular rate and pay the workers. In that case, there may not be any contractor willing to tender for the work. That way will come the hitch."

SRI S. SWAYAMPRAKASAM :—" Sir, from the answers given on the floor of the House, we find that there is some difficulty in the disbursement of wages due to the labourers. It is likely that the labourer may not get the wages he is entitled to. At the same time, the contractors are also liable to commit fraud. May I suggest to the Government to pay the wages to the workers directly? In that case also, there may be difficulty and there may be delay. If the contractor is asked to pay the amount, the Government may depute a particular officer to go to the spot and see that the wages are disbursed promptly in the presence of the contractor. I think this system can work satisfactorily."

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" I would request the hon. Member to leave the matter entirely to me. As I have said, there can be only one possibility of the contractor being asked to specify the wages he is likely to pay for a particular work. There can

[29th March 1955

be a certain amount of enforcement and sudden checks can be effected. There can be no hard and fast rule. We cannot depute a man to sit there and watch the disbursement. Later on, charges may be levelled that the officer was corrupt and that he colluded with the contractor and that the labourer did not get his due share. That is also again getting into a vicious circle. If the hon. Member can exercise some patience, I shall explore the possibility of introducing a system by which the contractor can be tied down and asked to specify the rates of wages he is likely to pay. We can insert a clause in the contract to that effect and I shall have it examined. Until such time, I request the hon. Member to be a little more patient.''

SRI N. RAJAGOPAL :—" சர்க்காருடைய ஷெட்யூல் ரேட்ஸ் யுத்த காலத்தில் தயாரிக்கப்பட்டது. இன்றைய நிலையில் கூலி நிலவரம் சற்று குறைந்திருக்கிறது. அதன் காரணமாக கண்ட்ராக்டர்கள்தான் அந்த லாபத்தை அடைகிறார்கள். அதை தொழிலாளர்களுக்குக் கொடுக்க மறுக்கிறார்கள். ஆகவே சர்க்கார் நாட்டின் நிலவரத்தை அனுசரித்து ஷெட்யூல் ஆப் ரேட்ஸை திருத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன் ? "

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" That is a separate question from the one we are discussing. If the hon. Member puts a separate question and makes his suggestions, I shall have them considered.''

SRI N. K. PALANISAMY :—" மத்திய சர்க்காரால் ஏற்படுத்தப்பட்ட பரிசீலனைக்கமிட்டி மராமத்து இலாகாவின் கீழ் வேலைசெய்யும் ஆட்களையும் கண்ட்ராக்டர்களின் கீழ் வேலைசெய்யும் ஆட்களைப்பற்றியும் தொடர்ந்து பரிசீலனை செய்து விசாரணை நடத்தி ரிப்போர்ட்டு சமர்ப்பித்திருக்கிறார்கள். அதன்படி எல்லா ராஜ்யங்களையும்விட சென்னை ராஜ்யத்தில்தான் அதிகமாக கூலி கொடுக்கிறார்கள் என்றும் மற்ற மாகாணங்களில் மராமத்து இலாகா குறைவாகக் கொடுக்கிறது என்றும் அதனால் குறைந்தபட்ச சம்பளத்தை நிர்ணயிக்க வேண்டும் என்று சிபாரிசு செய்திருக்கிறார்கள். போன வருஷம் இந்த ராஜ்ய லேபர் கமிட்டிக் கூட்டத்தில் இதைப்பற்றி முடிவு செய்யவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது. அதை அனுசரித்து குறைந்தபட்ச சம்பளத்தை நிர்ணயிக்க கனம் மந்திரி அவர்கள் விசாரணை செய்ய ஏற்பாடு செய்வார்களா ? "

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" இது வேறு விஷயம். இதைப்பற்றி தனிக் கேள்வியாகக் கேட்டால் அதைப்பற்றி பதில் சொல்லுகிறேன்."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" Sir, will the Government see that worker-contractors are encouraged to take up such schemes? For instance, in Urangal in Malabar, there is a society of workers. The workers themselves have formed into a society and they can be given the contracts. As a matter of fact, the Public Works Department and the other Departments of the Government are not giving contracts to such workers' societies. Will the Government consider the feasibility of giving the contracts to such workers' societies?''

29th March 1955]

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" I do not think what the hon. Member says is correct. But I presume that they are also taking their chance along with the other contractors and perhaps their rates may not compare favourably. We will try to encourage such workers' societies as far as possible, provided that their rates and conditions are also reasonable. I shall have this impressed on the Engineers and see that they are encouraged."

MR. SPEAKER :—" I have allowed enough time for this question. We shall pass on to the next question."

Steel plant with Soviet aid

* 1686 *Q.*—SRI T. C. NARAYANAN NAMBIAR: Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether the Madras Government have approached the Government of India for the establishment in this State of a Steel Plant proposed to be re-established by the Government of India with the aid of the Soviet Union? 9-10 a.m.

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" The Government of India were addressed for the establishment of a steel plant in this State. But it was not with any special reference to any steel plant which might possibly be put up with the aid of the Soviet Union."

Arrears of sales tax due from traders in Agra

* 1687 *Q.*—SRI V. R. NAGARAJAN (on behalf of Sri K. Aranganathan) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there are arrears of sales tax due to the State Government from some traders who are in Agra; and

(*b*) if so, the action taken to recover the same?

THE HON. SRI M. A. MANICKAVELU :—" (*a*) Sri Gupta Trading Company, Matur Glass Works, Ferozabad, Agra, assessees on the file of the Deputy Commercial Tax Officer, Peddunaickenpet, Madras, are in arrears of sales tax to this State Government as follows :—

1952–53	Rs. 51–10–6.
1953–54	Rs. 34–1–5.

No other dealer in Agra is in arrears of sales tax.

" (*b*) The Commercial Tax Officer, North Madras, has addressed the Collector of Madras for the issue of a certificate under the Revenue Recovery Act for addressing the Uttar Pradesh Government for the collection of the arrears."